1978 செப்டம்பர் 2]

(முற்பகல் 10-00)

2. அறிவிப்புகள்.

(அ) பேரவைத் தலைவரை பதவியிலிருந்து நீக்கக் கோரும் தனித் தீர்மானம் குறித்து அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை முருகன் அவர்கள் பேரவையின் 52-வது விதியின்கீழ் ஒரு அறிக்கை கொடுத்துள்ளார்கள். அது கீழ்க்கண்டவாறு :

That this house resolves to remove the Hon. Speaker,

இந்த அறிக்கை நேற்று, 1—9—1978 பிற்பகல் 1.50 மணிக்குக் கொடுக்கப்பட்டது. அந்த அறிக்கைமீது விதிமுறைகளின் படி மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, தாங்கள் ஆங்கிலத்தில் படித்தது என்னவென்று தெரியவில்லை என்று சிலர் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவரை பதவியிலிருந்து விலக்குவது பற்றிய தீர்மானம்.

3. ஒழுங்குப் பிரச்சினை.

உரிமை மீறல் பிரச்சினைகளை உடன் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைப் பற்றிய கவன ஈர்ப்பு. திரு அம்பிகாபதி.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் காலை இரண்டு உரிமை மீறல் பிரச்னை குறித்து நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். உரிமை மீறல் பிரச்னைக்குத்தான் முதல் இடம் கொடுக்கப்பட வேண்டும்.